
# பரிசுத்தம்

**அப்பொழுது நான்: ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன்; சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே என்றேன் (ஏசா (6:5).**




மேற்கண்ட ஏசாயா தீர்க்கதரிசியின் அறிக்கையே நம்முடைய அறிக்கையாகவும் இருந்திருக்கும். அன்று பரலோக பலிபீடத்திலிருந்து எடுக்கப்பட்ட நெருப்புத் தழலால் ஏசாயா தீர்க்கதரிசி சுத்தீகரிக்கப்பட்டது போல, இன்று நாம் கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்ததால் சுத்தமாக்கப்பட்டிருக்கிறோம் **(1 பேதுரு 1:19)**, தேவனுடைய பிள்ளைகளாய், அவருக்கென ஊழியம் செய்ய அழைக்கப்பட்டிருக்கிறோம். கிறிஸ்துவின் இரத்தம் நம்மை முற்றிலுமாய் பாவத்திலிருந்து விடுவித்திருக்கிறது. பாவ மன்னிப்பின் நிச்சயத்தை நாம் பெற்றிருக்கிறோம். அதே நேரத்தில் மேற்கண்ட வசனத்தில் மற்றொரு காரியமும் கூறப்பட்டிருக்கிறது அது **அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன்** என்பதாகும்.

இன்றைய காலகட்டத்திலும் நம்முடைய அனுபவமும் இதுவேயாகும். நாம் தேவனால் சுத்திகரிக்கப்பட்டிருந்தாலும், பாவம் நிறைந்த இந்த உலகத்திலேயே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பாவத்தில் இருந்து விடுதலை பெற்றாலும், பாவத்தின் சூழலில் இருந்து நாம் இன்னும் விடுதலைப் பெறவில்லை. அதனாலேயே **கலா 5:17** இல் கூறப் பட்டுள்ளப்படி **"மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள்**

**செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது"**, நமது மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்திற்கு விரோதமாகவும் போராடுகிறது. நாமும் பல வேளைகளில் நமது வார்த்தையிலும், சிந்தனையிலும், பார்வையிலும், செயலிலும் பாவத்தில் வீழ்ந்துவிடுகிறோம். ஆகிலும் தேவ கிருபை நாம் அதற்காய் வருத்தப்பட்டு அறிக்கையிட்டு மனம் திரும்பும் பொழுது நமது பாவங்களை மன்னிக்கிறது.

ஆகிலும் நாம் நம்மை சுற்றியுள்ள உலகத்தை காணும் பொழுது, அங்கு நடக்கும் பொல்லாத பாவகாரியங்களும், பிசாசின் கிரியைகளும், தேவனுக்கு விரோதமான செய்கைகளும், தேவ பிள்ளைகளை துன்புறுத்துகின்ற காரியங்களும், தேவன் ஏன் இதை எல்லாம் அனுமதித்துயிருக்கிறார் என்று எண்ண தோன்றுகிறது. மனிதர்களின் இருதயம் கடினப்பட்டு, தேவனுக்கு கீழ்படியாமல், அற்ப காரியங்களுக்காய், பொருளுக்காய், பதவிக்காய், சுகபோகத்திற்காய், தன்னையும் அழித்துகொண்டு, மற்ற மனிதர்களையும் அழிவின் பாதைக்கு கொண்டு செல்வோர் ஏராளம்.

ஆனால் இதில் எதைக்குறித்தும் உலகம் (உலக மக்கள்) கவலைப்படாமல் இன்னும் எவ்வாறு பாவத்தில் ஈடுபடலாம் என்பதிலும், பாவத்தில் வாழ்வோரை கண்டிப்பதற்கு பதிலாக அவற்றை ஊக்குவிப்பதையும், அதற்காய் உலக அரசாங்கங்களே சட்டத்தை இயற்றுவதையும் காணலாம். இன்னும் சிலபேர் இப்படிப்பட்ட பாவகாரியங்களில் வாழ்ந்து கொண்டே தேவனையும் பிரியப்படுத்தலாம் என்று முயற்சிப்பதும், அதையும் நியாயப்படுத்திடும் தேவ சபையில் இருக்கும் சிலரையும் நாம் காணும்பொழுது, தேவன் ஏன் மொனமாயிருக்கிறார் என்று நாம் எண்ணலாம்.

ஆகிலும், **பிரசங்கி 12:14** கூறுகிறபடி **"ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்"**, தேவன் ஒவ்வொரு காரியத்திற்கான நியாயத்திர்ப்பையும் நிறைவேற்றியே தீருவார். சுட்டெரிக்கப்பட்டு போவதே இவை ஒவ்வொன்றின் முடிவாகும் **(எபி 6:8)**. தேவன் சகலத்தையும், சகலரையும் நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார், ஒருவராகிலும் தப்பி போவதில்லை. தேவன் நம்மை இப்படிப்பட்ட சூழலில் வைத்திருப்பதன் காரணம், இப்படிப்பட்ட உலகத்தில் இருந்தே நாம் மீட்கப்பட்டது போல அவர்களும் மீட்க படமுடியும் என்பதற்காகவே. எனவே நாம் நம்மையும் பரிசுத்தமாய் காத்துக்கொண்டு,

மற்றவர்களுக்காகவும் காரியங்களை செய்ய வேண்டும். அதுவே நம் ஒவ்வொருவருக்கும் தேவன் கொடுத்த ஊழியமாகும்.

ஆனால் அதே நேரத்தில் மரணத்துக்கு எதுவான பாவத்தை செய்யும் பொழுது, **1 யோ 5:16** இல் கூறப்பட்டுள்ளபடி **"மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைத் தன் சகோதரன் செய்ய ஒருவன் கண்டால், அவன் வேண்டுதல்செய்யக்கடவன், அப்பொழுது அவனுக்கு ஜீவனைக் கொடுப்பார்; யாருக்கென்றால், மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைச் செய்தவர்களுக்கே; மரணத்துக்கு ஏதுவான பாவமுண்டு, அதைக்குறித்து வேண்டுதல்செய்ய நான் சொல்லேன்"**, அவர்களுக்காக நாம் வேண்டுதல் செய்ய முடியாது.

வேதத்தில் பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான பாவம் செய்கிறவன் மன்னிக்கப்படான் என்று ஆண்டவர் கூறியுள்ளார், **"எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்; எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை" (மத் 12:32).** பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான காரியங்களை செய்வது மட்டுமல்ல, ஆவியானவரின் கிரியை அல்லாததை ஆவியானவரின் கிரியை என்று சொல்வதும் அல்லது அதை ஆமோதிப்பதும் ஆவியானவருக்கு விரோதமான செய்கையே ஆகும். இப்படிப்பட்ட பரிசுத்த குலைச்சலே இன்று சபைகளில் காணப்படுகிறது. பிசாசிற்கு இடம் கொடுத்து, தங்கள் தேவ அழைப்பில் இருந்து விழத்தள்ளப்பட்டவர்களால் வஞ்சகமாய் நடைபெறும் இப்படிப்பட்ட காரியங்களால் அநேக தேவ பிள்ளைகள் வழிவிலகி போகின்றனர். எனவே ஒரு தேவ பிள்ளை உலகத்தில் இருக்கிற அசுத்ததிலிருந்து தன்னை காத்துக்கொள்வது போல, ஆவியானவருக்கு விரோதமான இப்படிப்பட்ட காரியங்களிலிருந்தும் தன்னை விலக்கி காத்துக்கொள்ள வேண்டும்.

மேலும் வேற்றுமையான உபதேசத்தை போதித்து, அறிவியலையும் (உலக ஞானம்), மற்ற மார்க்கங்களையும் (விக்கிரக வழிபாடு) தேவ சபையில் கலக்க நினைப்போருக்கும் சபையில் இடம்கொடாமல், தேவ பிள்ளைகள் தங்களை விலக்கிக் காத்துக் கொள்ள வேண்டும், **"ஒருவன் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் ஆரோக்கியமான வசனங்களையும், தேவபக்திக்கேற்ற உபதேசங்களையும் ஒப்புக்கொள்ளாமல், வேற்றுமையான உபதேசங்களைப் போதிக்கிறவனானால், அவன் இறுமாப்புள்ளவனும், ஒன்றும் அறியாதவனும், தர்க்கங்களையும் வாக்குவாதங்களையும்பற்றி நோய்கொண்டவனுமாயிருக்கிறான்;**

**அவைகளாலே பொறாமையும், சண்டையும், தூஷணங்களும், பொல்லாத சம்சயங்களுமுண்டாகி, கெட்ட சிந்தையுள்ளவர்களும் சத்தியமில்லாதவர்களும் தேவபக்தியை ஆதாயத்தொழிலென்று எண்ணுகிறவர்களுமாயிருக்கிற மனுஷர்களால் உண்டாகும் மாறுபாடான தர்க்கங்களும் பிறக்கும்; இப்படிப்பட்டவர்களை விட்டு விலகு" (1 தீமோ 6:3-5).** இவ்வாறு பலவிதங்களில் பிசாசானவன் இந்த கடைசி காலத்தில் தேவ பிள்ளைகளாகிய நம்மை தாக்கினாலும், ஆண்டவரோ இவை எல்லாவற்றையும் மேற்கொள்ளும்படியான கிருபையை அளித்து நம்மை தமக்குமுன் மாசற்றவர்களாய் நிறுத்துவார்.

மேலும் இப்படிப்பட்ட காரியங்களில் இருந்து நம்மை பாதுகாத்துக்கொள்ள ஒரு எளிய வழி அவரை அறிகிற அறிவிலே ஒவ்வொரு நாளும் நாம் பெருகுவதே ஆகும், **"தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" (2 பேதுரு 1:3,4).** தேவ வார்த்தையாகிய வேதத்தை தியானிப்பதும், தேவ பிரசன்னத்தை, அவருடைய ஐக்கியத்தை ஜெபத்தில் உணர்வதும் நாம் தேவனுக்கு செய்யும் எந்தவொரு ஊழியத்தை காட்டிலும், மிக மிக முக்கியமானதாகும். இப்படியாய் தேவ உறவில் நம்மை காத்து கொள்வோம், மற்றவரையும் தேவ உறவிற்க்குள்ளாய் வர வழி நடத்துவோம். தேவன்தாமே நம்மை சகல தீமைக்கும் விலக்கி பாதுகாத்து தம்முடைய நித்திய ஜீவகரையில் சேர்ப்பாராக. ஆமென், அல்லேலூயா.